**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு, ஜூன் / ஜூலை 2023**
**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**
**மற்றும் மறுகூட்டல்–II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூன் / ஜூலை 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை 09.08.2023 **(புதன்கிழமை) பிற்பகல்** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification–ஐ Click செய்தவுடன் **HSE Second Year Exam, JUNE/JULY– 2023 – Scan Copy Download"** என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாள்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல்–II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்,** இதே இணையதள முகவரியில் "Application for Retotalling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் மேற்படி பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை 10.08.2023 **(வியாழக்கிழமை) முற்பகல் 11.00 மணி முதல் 12.08.2023 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், . புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் (தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு) முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திலும் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை

மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்/ முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

<u>மறுமதிப்பீடு</u>

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ. 505/-

<u>மறுகூட்டல்-II</u>

உயிரியல் பாடம் மட்டும் – ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ.205/-

**ஒம்/-**

**இயக்குநர்**

நாள் : 08.08.2023

இடம் : சென்னை – 600 006.